★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)
மலர் 25 ஆடி 27 ஜுலை 2 இதழ் 180
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12—8—83

## கிளிநொச்சி தனிநிர்வாக மாவட்டமாக இயங்கும்!

### அமைச்சரவை முடிவு எடுத்தது

(கொழும்பு)

கிளிநொச்சி தேர்தல் தொகுதியை தனி நிர்வாக மாவட்டமாக மாற்றுவதென அரசு முடிவுசெய்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் சமர்ப்பித்த பிரேரணையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

இதுவரை யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்த கிளிநொச்சித் தொகுதியைத் தனிமாவட்டமாக மாற்றுமாறு தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி.க்களும் பல பொது ஸ்தாபனங்களும் கோரிவந்தன.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் பிரசாரத்திற்கு வந்திருந்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இது தொடர்பாக உறுதியளித்திருந்தார்.

538 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட கிளிநொச்சி தொகுதியில் 90 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். (கு)

# அகதிகள் தேவைகளுக்கு இரு யாழ். ராணுவ முகாம்கள்!

## ஒன்றில் பொலிஸ் நிலையம் அமையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த நான்கு முகாம்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியதைத் தொடர்ந்து இரு இராணுவ முகாம்கள் அகதிகள் சம்பந்தப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன. மாதகல் முகாமும், குருநகர் முகாமுமே இவ்வித தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

இந்தத் தகவலை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா நேற்றுத் தெரிவித்தார்.

குருநகர், வல்வெட்டித்துறை தொண்டமானாறு, மாதகல் ஆகிய ராணுவ முகாம்களிலிருந்தே இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்,

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இப்போது பொலிஸ் நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது.

வல்வெட்டித்துறைபொலிஸ் நிலையம் முன்னர் வல்வெட்டியில் இயங்கியது. இட்போது அந்த இடத்தைக் காலிசெய்துகொண்டு, வல்வெட்டித்துறை இராணுவமுகாம் இருந்த ஊரிக்காடு கடற்கரையில் தமது நிலையத்தை அமைத்துள்ளனர்.

தொண்டமானாறு உப்புமால் கடற்கரையில் அமைந்திருந்த முகாம், மாதகல் முகாம், குருநகர்.முகாம் வல்வெட்டித்துறை ஊரிக்காடு முகாம் ஆகியன இப்போது காலியாகவுள்ளன.

இந்தமுகாம்களில் இரு முகாம்களை கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இங்கு வந்துசேரும் அகதிகள் சம்பந்தப்பட்ட தேவைகளுக்குப் பயன்

(4-ம் பக்கம் பார்க்க)

## "நிவாரணப் பணிப்பேச்சுக்கள் முக்கியம் பெற்றிருந்தன"

### இந்திராவுடனான பேச்சுப்பற்றி 'எச். டபிள்யூ' தகவல்

புதுடில்லி, ஆக. 11

''இலங்கையில் நடைபெற்ற கலவரங்களின்போது ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்த விடயங்களே இந்தியப் பிரதமருடனான பேச்சுக்களில் அதிக முக்கியம் பெற்றிருந்தன'' என்று இலங்கை அரசின் விசேட பிரதிநிதி திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

திரு. ஜயவர்த்தன, பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நேற்றுப் பிற்பகல்

(4-ம் பக்கம் பார்க்க)

## கைதடியில் நிரந்தர 'அகதிகள் முகாம்'

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள கைதடி முகாமில் 100 பேர் தங்கியுள்ளனர்,

கைதடி ஆயுள்வேதக் கல்லூரியில் நிரந்தர முகாமாக இது இயங்குகிறது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா முகாமிலுள்ள அகதிகளுக்கு சகல வசதிகளும் கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்,

## யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட (ஜூலை 83) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இரண்டாவது ஆண்டுப் பரீட்சை (ஜூலை 1983) முடிவுகள் வெளியாகியுள்ளன. விபரங்கள் கீழ் வருமாறு:-

**முதல் வகுப்புச் சித்தி**

எம். ஏ. அருளானந்தன் (சிறப்புச் சித்தி), எ. ரவீந்திரன் (சிறப்புச் சித்தி), ஆர். ரவிச்சந்திரன் (சிறப்புச்சித்தி), செல்விகள் ஜே. கே. காசிநாதர் (சிறப்புச் சித்தி), ஆர். மோகனரதி (சிறப்புச் சித்தி).

**இரண்டாம் வகுப்புச்சித்தி**

செல்வி எஸ். பிரான்சிஸ் (சிறப்புச் சித்தி), செல்வி சிவகாமசுந்தரி (சிறப்புச் சித்தி), செல்வி எஸ். சிவப்பிரகாசம் (சிறப்புச் சித்தி), செல்வி எம். ஜே. ஜி. ஞானப்பிரகாசம் (சிறப்புச் சித்தி), செல்வி எஸ். யசோதா, செல்வி பி. மலர்விழி, செல்வி எஸ். சிவலிங்கம்.

செல்வி என். எ. பி. பிரபு, எ. கைலைநாதன், என். சிறீதரன், எ. வரதராசா, ஜி. விக்னராஜா, கே. சக்திதாசன்

**சாதாரண சித்தி**

எம். தேவராஜா, என். பரீட், ஜி. ஆர். எ. பிரான்சிஸ், வி. ஞானநாதன், பி. ஜெகதீசன், எ. வி. மென், எம். மொஹமட்பஹீம், எ. நோர்மன் ஷேக்ஸ்பியர், கே. பார்த்திபன், டி. எம். ரட்ணராஜா, பி. ரவீந்திரநாதன், சி. எஸ். ஜோசப், எஸ். சோமஸ்கந்தராசா, சி. சுதாகரன், ரி. வாஹீசன், கே. அதஹீரஹ்மான், எம். எ. மொஹமட் அனஸ், எ. எம். மொஹமட் றியாஸ், ரி. முரளிதரன், எஸ்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கலவரங்களில் இறந்தோர் தொகை 316

### அரசு அதிகாரி தகவல்

(கொழும்பு)

கலவரங்களின் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 316 ஆக உயர்ந்துள்ளது; ராஜாங்க அமைச்சு செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே இத்தகவலைத் தெரிவித்தார்.

கலவரங்களில் ஈடுபட்டதாக 34 பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், 31 பேர் இவ்வாறு சுடப்பட்டபோது காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவம்: ஆணையாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகி அடுத்த மாதம் ஏழாம் திகதிவரை நடைபெறும். உற்சவகாலத்தில் சுவாமி வீதிவலம் வருவது உள்வீதியுடன் கட்டுப்படுத்தப்படும். திருவிழாக் காலத்தில் பொலிஸார் கடமையிலீடுபடமாட்டார்கள். தடை முகாம்களும் இருக்க மாட்டாது'' என்று யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே.சிவஞானம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''அவசரகாலச் சட்டப் பிரமாணங்களுக்கு அமைய நாட்டின் சகல கோவில் உற்சவங்கள் யாவும் அரசினரால் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதையும், நாட்டின் தற்போதைய நிலை உற்சவ ஒழுங்குகளை விரிவான முறையில் மேற்கொள்ள உகந்ததாயில்லை என்பதையும் அனைவரும் அறிவர். எனினும் இடையறாது நடைபெற்றுவந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முருக பக்தர்களின் நலன் கருதி, இவ்வாண்டு மிக எளிய முறையிலே நடத்த ஆலய அறங்காவலர் திரு. குமாரதாஸ் மாப்பான முதலியார் திடசங்கர்ப்பம் கொண்டுள்ளார். சுவாமி வீதிவலம் வருவது உள்வீதியுடன் கட்டுப்படுத்தப்படும்.

''பாதுகாப்பு முதலியனவற்றைக் கொண்டு மாநகரசபை வழமையாக ஏற்படுத்தி வந்த தற்காலிகச் சந்தை, கடைகள் ஆகியவற்றை அமைப்பது ரத்

(4-ம் பக்கம் பார்க்க)

## செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## அறிவித்தல்

எமது தலைமை, கிளை நிறுவனங்களில் நடைபெற்ற எல்லா வகுப்புகளும் மீண்டும் 9-8-1983 செவ்வாய் முதல் நடைபெறுகிறது. எமது கொட்டடி (72, ஆஸ்பத்திரி வீதி) கிளை நிறுவனத்தில் நடைபெற்ற எல்லா வகுப்புகளும் மாணவர்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு எமது தலைமை நிறுவனத்திற்கு (274/2 ஆஸ்பத்திரி வீதி) தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

BOND INSTITUTES
Jaffna

(8167)

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்பிறே பெயின்ரர், சேவிஸ் மன்—3 வருட அனுபவம் சான்றுப் பத்திரங்களுடன் உடன் வரவும். பரஸ்கோ, பருத்தித்துறைவீதி, நல்லூர். 8165

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டை (581401116 x )9-8-83இல் மல்லாகம்— தெல்லிப்பழைக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து ஒப்படைக்கவும். நடராசா இரத்தினராசா, 64, காரைக்காட்டுலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 8168

### விற்பனைக்கு

சாவகச்சேரி பஸ்நிலையத்தில் இருந்து 200யார் தூரத்தில் சிவன்கோவில் வீதியில் மூன்றரைப்பரப்பு காணி சிறிய வீடு, கிணறு, மலசலகூடம் ஆகிய வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பொ. இந்திரராஜா சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி. 8153

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணிவீதி 98 ம் (38) இலக்கத்தில் கல்விக்கந்தோருக்கு முன்பாக வீடு கட்டுவதற்குரிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும். 8166

சாவகச்சேரி பஸ்நிலையம், பாடசாலை புகையிரத நிலையம், ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 2½ பரப்பு காணி புதிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சார, தண்ணீர் வசதியுண்டு. ''பரம்ஸ்'' நியூமார்க்கட், சாவகச்சேரி, அல்லது ப.கனகரட்ணம், சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 8162

## சர்வதேச வேலை முகாமும் கருத்தரங்கும்

(சாவகச்சேரி)

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச வேலை முகாமும் கருத்தரங்கும் கடந்தவாரம் பிலிமத்லாவையிலுள்ள கிராமிய அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் ஜெர்மனி பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து. பங்களாதேஷ், வட அயர்லாந்து, இந்தியாபோன்ற நாடுகளின் பிரதிநிதிகளும், இலங்கைப் பிரதிநிதிகளும் பங்குகொண்டிருந்தனர்.

இச்சர்வதேசக் கருத்தரங்கின்போது மனிதர்களை எதிர் நோக்குகின்ற சமூக அநீதிகள் குறைபாடுகள், பாரபட்சங்கள் பற்றி மிகவிரிவாக ஆராயப்பட்டன. (கி)

## வலி–கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### அறிவித்தல்

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4600 க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம், கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 20-08-83ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்

நீர்வேலி,
1983-08-10 8164


### விசேட அறிவித்தல்

எமது கல்வி நிலையத்தில் நடைபெற்ற எல்லா வகுப்புகளும் 11-8-83 தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. வகுப்புகள் வழமையான நேர அட்டவணையின்படி நடைபெறும்.

நிர்வாகி

**ASTAN** INSTITUTE
166/1, HOSPITAL ROAD JAFFNA



### விசா இல்லாமல்

சிங்கப்பூர், லண்டன், கனடா, மலேசியா, கொங்கொங், சம்பியா அல்லது பாகாமா ஆகிய நாடுகளுக்கு செல்ல

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை

வங்கியின் கட்டணத்தில்

- விமான ஆசன பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைக்கும் இன்றே நாடுங்கள்

**மக்கிறேன் டிரவல்ஸ் லிமிட்டட்**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(ZAMBIAN AIRWAYS பிரதான விற்பனைப் பிரதிநிதி)
General Sales Agents

த. பெ. எண்: 92 போன்: 24154


## ஆகஸ்ட் மாதத்துக்கான ஒய்வூதியம் நேற்று முதல் வழங்கப்படுகிறது!

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதத்துக்கான ஒய்வூதியம் நேற்று முதல் வழங்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற கலவரத்தின்மூலம் இடம் பெயர்ந்துள்ள ஒய்வூதியம் பெறுவோருக்கும், முகாம்களிலுள்ளவர்க்கும் ஒய்வூதியம் கிடைக்கச் செய்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வங்கி மூலம் ஒய்வூதியம் பெறுவோர்கள் முகாம்களில் இருந்தால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. பிரட்மன் வீரக்கோனுடன் தொடர்பு கொண்டால் அதற்கான பற்று சீட்டுக்கள் வழங்கப்படும். தபால் நிலையங்களின் மூலம் பெறுவோருக்கு முகாம்களிலேயே பணம் விநியோகிக்கப்பட்டுள்ளது. [கு]

## உள்வீதியில் மட்டும் திருவிழா நாளை நல்லூர் ஆலய உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் இவ்வாண்டு உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்முறை உற்சவம் உள் வீதியில் மட்டும் நடைபெறும். 13-ம் திகதி சனிக்கிழமை கொடியேற்ற உற்சவத்தின் காலை பூசை 8 மணிக்கு நடைபெறும். வசந்த மண்டபப் பூசை காலை 8-30 மணிக்கு நடக்கும் காலை 10-00 மணிக்குக் கொடியேற்றப்படும்.

மாலை உற்சவம் 3-30 மணிக்கு சாயரட்டைப் பூசையுடன் ஆரம்பமாகும். இரண்டாம் காலப்பூசை 4 மணிக்கு நடக்கும் வசந்த மண்டப பூசை 4-15க்கும் சுவாமி எழுந்தருளல் 4-45 க்கும் அர்த்த சாமப்பூசை மாலை 6 மணிக்கும் நடைபெறும்.

## இன்றைய பலன்

ஆடி 27ம் திகதி
வெள்ளிக்கிழமை
(12—8—83)

மேடம்: சிந்தையில் குழப்பநிலை தோன்றும், மனைவியின் உடல்நலம் பாதிக்கப்படலாம், செலவீனங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும், கடன்பட நேரிடலாம்.

இடபம்: பரோபகார சிந்தை மேலிடும், பொதுப் பணி புரிவதில் ஆர்வம் பிறக்கும், மதத்தலைவர் ஒருவர் நல்லாசி வழங்குவர், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையினுல் நல்லபெயர் கிடைக்கும்.

மிதுனம்: புதுக் கண்டுபிடிப்புகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், விஞ்ஞானத்துறையில் ஈடுபாடுடையவர்கள் பாராட்டப்படுவார்கள், உயர்ந்த அந்தஸ்துண்டு.

கடகம்: வேண்டிய அளவிற்கு வெள்ளிப்பணம் துள்ளும், புதிய நண்பர்களைத் தேடிக்கொள்வீர்கள், நீண்ட நாள் கனவு நனவாகும், சகலதுறைகளிலும் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும், மேலிடத்துச் செல்வாக்கு பாதிக்கப்படலாம், அயலவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளவும்.

கன்னி: முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம்.

துலாம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும், வீட்டில்உள்ளவர்களின் அன்பு தப்பாமல் கிடைக்கும், இருமனம் கலந்தவர்களின் மத்தியில் இனிமையான சம்பவம் இடம்பெறும்.

விருச்சிகம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும், சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு, இனபந்துக்களினுத் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு.

தனுசு: தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவைத் தேடித்தரும், வாகன நலனுடன் வாழ்வில் சுகம் உண்டு, இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும், வெற்றியும் உண்டு.

மகரம்: கலையுலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும், சுவைதரும் நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கம் பார்க்க)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களின் 30 - வது ஆண்டு நினைவுதினமும் குருபூசையும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் (12-8-83) இன்று காலை கொண்டாடப்படும்.

## சுந்தரமூர்த்திநாயனுர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை வரும் 14 - ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், நீராவியடி சைவபரிபாலன சபைமண்டபத்தில் கூட்டுவழிபாடு - சிவபூசை - சொற்பொழிவு - சிவனடியார் பூசை ஆகிய நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.

## வருடாந்த உற்சவம்

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 14-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இம்மாதம் 22-ம் திகதி தேர்த்திருவிழாவும், 23-ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெற்று உற்சவம் நிறைவுபெறும். [க]

## அகதிகள் கப்பல் சேவை முடிவடைந்தது!

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலமாக அகதிகளைக் கொண்டுசெல்லும் பணி முடிவடைந்துள்ளது. கொழும்பு முகாம்களில் உள்ள அகதிகளில் பலர் தற்போது கப்பல்கள் மூலம் செல்வதை குறைத்துவருவதாகவும், சிலர் முகாம்களிலிருந்து தமது வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருப்பதனுலுமே கப்பல் சேவை அத்தியாவசியமற்றதெனக் கருதப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவுடன் அகதிகளைக் கொண்டுசெல்லும் கப்பல் சேவை நிறுத்தப்பட்டது. இதுவரை 17,267 அகதிகள் கொழும்பிலிருந்து கப்பல்கள் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். இரண்டாயிரத்து இருநூற்று மூன்றுபேர் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டனர்.

அகதிகளைக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கப்பல்கள் அனைத்தும் இலங்கை கப்பல் போக்குவரத்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானவையாகும். தற்போது அக்கப்பல்கள் இக் கூட்டுத்தாபனத்திடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளன.

''தேவையேற்படும் பட்சத்தில் மட்டும் இரண்டொரு கப்பல்கள் அகதிகளை ஏற்ற பயன்படுத்தப்படும்'' என்று ஆணையாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். (கி)

## நிதி வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் வந்து சேரும் அகதிகளுக்கு குளிர்பானம் வழங்குவதற்கென யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் சிலர் (ரூபா 2,650) இரண்டாயிரத்தி அறுனூற்றி ஐம்பது ரூபாவை வண். தென். கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. வி. கே. தளையசிங்கம் மூலம் யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரிடம் ஒப்படைத்தனர்.

பணம் வழங்கிய வர்த்தகர்களின் விபரம் வருமாறு;

முகமம்மதலி அப்துல்அலி - 500-00 ரூபா,
த. குமாரசாமி பிடவை மாளிகை - 500-00 ரூபா,
கணேசன் பிடவை மாளிகை - 500-00 ரூபா,
நியூட்டன் ரேட் சென்ரர் - 500-00 ரூபா,
ஜெயலட்சுமி கம்பனி -250-00 ரூபா,
ரூபி பவுண் புறோக்கர் - 200-00 ரூபா,
லலிதா ஜுவலறி - 200-00 ரூபா'


### OXONIA INSTITUTE

OXONIA INSTITUTE ல் இந்தத்தவணைக்குப் பதிவு செய்த மாணவர்கள் தங்கள் படிப்பை யாழ்ப்பாணத்தில் தொடர விரும்பின் 21, பிரதான வீதியிலுள்ள CANTABIA INSTITUTE ல் மேலதிக கட்டணம் எதுவுமின்றித் தொடர்ந்து படிக்கலாம். வகுப்புகள் எல்லாம் 13-08-83 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

DIRECTOR OF STUDIES
OXONIA INSTITUTE
48-A, HAIG ROAD,
COLOMBO-4.

## 5ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை 3-ம் திகதி

(கொழும்பு)

இலங்கை கல்விச்சேவையின் ஐந்தாம் வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாந்திகதியிலிருந்து மூன்றும் திகதிக்கே இப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் மாணவர்கள் இப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். நாடு முழுவதிலும் இரண்டாயிரத்து முந்நூறு பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும். (கி)


றீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM INDIA

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

லிடோ (யாழ். நகர்)
காலை 10-30
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
காலை 10-30
விஜயன் - சத்தியகலா
தனி மரம்

சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30
சிவாஜி — லட்சுமி
தியாகம்
(ஈஸ்ட்மென் கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)


## லெபனனில் 3 பிரதான அமைச்சர்கள் கடத்தப்பட்டனர்!
### பெய்ரூட் விமான நிலயத்தில் கடுஞ்சண்டை!

பெய்ரூட், ஆக. 11

லெபனன் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மூன்று அமைச்சர்கள் பெய்ரூட்டின் தென்பகுதி நகரொன்றில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளனர்.

இம்மூன்று அமைச்சர்களும் சுகாதாரம், நிதி, பொதுவேலைகள் அமைச்சுக்களுக்குப் பொறுப்பானவர்கள். இவர்களைக் கடத்திச் சென்றவர்கள் லெபனனின் டூஸ் தீவிரவாதப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

கடத்தப்பட்டவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்று தெரிவித்துள்ள இத்தீவிரவாதிகள், லெபனன் ஜனாதிபதி ஜமாயலின் அமைச்சரவையில் அங்கம் பெறும் பத்து அமைச்சர்களில் ஆறு பேரைக் குறிப்பிட்டு அவர்களை ராஜினாமாச் செய்யும்படியும், லெபனனின் தென்கிழக்குப் பகுதியிலிருந்து லெபனன் படைகளை வாபஸ் பெறும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தீவிரவாதிகளுடனான பேச்சுக்களில் லெபனன் ஜனாதிபதி அமின்ஜமாயல், பிரதமர் திரு. ஷாவிக்வாசன் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தவேளை பெய்ரூட் சர்வதேச விமான நிலயத்தில் பெரும் சண்டை நேற்று நடைபெற்றது. இச் சண்டையில் நால்வர் பலியானார்கள். 38 பேர் காயமடைந்தனர்.

மத்தியகிழக்குக்கான அமெரிக்கப் பிரதிநிதி திரு. றேபேர்ட் மக்பெலன் இச்சண்டை நிகழ்ந்தவேளை அவ்விமான நிலயத்திலிருந்தார். ஆயினும் அவர் எவ்வித பாதிப்புமின்றி அங்கிருந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## நைஜீரியா பொதுத்தேர்தல் ஜனாதிபதி ஷகாரி வெற்றி!

லேகோஸ், ஆக. 11

நைஜீரியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஜனாதிபதி திரு. ஷேகோஷகாரி பெரு வெற்றி பெற்றுள்ளார்.

திரு. ஷகாரி இவ்வெற்றியையடுத்து இரண்டாவது தட்வையாக நான்கு வருடங்கள் ஆட்சி செய்யும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

இவரின் கட்சி 12 கோடி வாக்குகளையும், பிரதான எதிர்க்கட்சி 8 கோடி வாக்குகளையும் பெற்றன. 16தொகுதிகளில் தேர்தல் இடம்பெற்றது.

ஜனாதிபதி ஷகாரி 1979ம் ஆண்டிலேயே முதலாவது தடவையாக ஆட்சிப் பொறுப்பைப்பெற்றார். அந்த ஆண்டிலேயே 13 வருட இராணுவ ஆட்சிக்குப் பின்னர் முதலாவது தடவையாக நைஜீரியாவில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது இரண்டாவது தடவையாக நான்கு வருடங்களின் பின்னர் தேர்தல் நடத்தப்பட்டது. (கி)

## இன்றைய பலன்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறும், வெளியிடத்திலிருந்து வியப்பூட்டும் செய்தி ஒன்று கிடைக்கப்படலாம்.

கும்பம்: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம் பெறும், தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர், பெரியவர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும்.

மீனம்: நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும், நண்பர்கள் காலைவாரிவிட முனைவார்கள், தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத்தரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தமிழக சட்டப்பேரவையில் இந்திரா காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சி!
### கருணாநிதி, அன்பழகன் ராஜினாமா

சென்னை, ஆக. 11

தமிழ்நாடு மாநில சட்டப் பேரவையில் பிரதான எதிர்க் கட்சியாக இந்திரா காங்கிரஸ் கட்சி மாறியுள்ளது.

திராவிட முன்னேற்றக்கழகமே இதுவரை பிரதான எதிர்க்கட்சியாக இருந்தது. இக்கட்சியின் தலைவர் திரு மு. கருணாநிதி, பொதுச்செயலாளர் திரு. அன்பழகன் ஆகியோர் ராஜினாமாச் செய்ததையடுத்தே இந்திரா காங்கிரஸ் கட்சி தமிழக சட்டப்பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாக மாறியுள்ளது.

தி. மு. க. உறுப்பினர் தொகை தற்போது 31ஆக சட்டப்பேரவையில் குறைவடைந்துள்ளது. (கி)

## ஆடிமுருங்கை தேடி நடு

சோறும் கறியும் உணவு, பாணும் வெண்ணெயும் உணவு. கிழங்கும் சம்பலும் உணவு. ஆனால் முருங்கை இலை, காய் சேர்ந்த கறியும் சோறும் உணவும் மருந்துமாகும். சித்தவைத்தியரின் அற்புத ஏலாதிக் குளிகைகள் உணவாயும், மருந்தாயும் உடலைத் தேற்றும் என்பதை எவரும் அறிவர்.

முருங்கைப்பட்டையில் பலவித உலோகச் சத்துக்கள் உண்டு. அந்த உலோகங்களைப் பொடிசெய்து உண்பதால் உலோகச் சத்து உடலில் செறியாது. ஆனால் முருங்கைப்பட்டையிலுள்ள உலோகம் உடலில் செறிந்து பயன்தரும். பாகம்பண்ணிச் சாம்பார், சூப் முதலியவற்றில் பயன்காணலாம். பட்டையைப் போல வேரும் பயன்தரும். உணவிற் கலந்து வந்த விடத்தன்மையிருந்தால் அதனை வெட்டி நல்ல சுகத்தைத்தரும். இரத்தச்சுத்திக்கு முருங்கைக்காய். இரும்புச்சத்துக்கு முருங்கைக்காய். முருங்கைமரத்திலிருந்து கிடைக்கும் பச்சைக் கோந்தில் ஒரு சொட்டைக் காதில்விட்டால் காதுவலி உடனே நின்றுவிடும்.

முருங்கையை எல்லோரும் நட்டுப்பயன்பட வேண்டும். வீட்டில் ஒரு முருங்கையையாயினும் நட்டால் உணவாகவும், மருந்தாகவும் பயன்பெறலாம். ''ஆடிமுருங்கை தேடி நடு'' முருங்கை நடுவதற்கு ஆடி மாதம் சிறந்தது. எல்லோரும் நட்டுப் பயன்பெறுவோமாக.

-க. கனகராசா (ச.நீ.)

## சோவியத் அணு நீர்மூழ்கி செயலற்று மூழ்குகின்றது!

லண்டன், ஆக. 11

வடபசுபிக் கடல் பகுதியில் சோவியத் யூனியனின் அணு சக்தி நீர்மூழ்கிக்கப்பலொன்று செயலிழந்தநிலையில் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சோவியத் பாதுகாப்பு வட்டாரங்கள் இச்செய்தியை மறுத்துள்ளன. ஆயினும் மீட்புப் படகுகள் பல மேற்குறிப்பிட்ட கடல் பிரதேசத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்ததை அவதானித்த பின்னரே இச்செய்தி பெருமளவு ஊர்ஜிதமாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

செயலற்றுள்ள அந்நீர்மூழ்கிக் கப்பலில் 19 சிப்பந்திகள் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது இக்கப்பல் மூழ்கிய செய்தி உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படுமாகில் செயலிழந்து கடலில் மூழ்கிய இரண்டாவது சோவியத் நீர்மூழ்கி கப்பல்இதுவாகும், முதலாவது, பிரிட்டனின் கடல் பகுதிக்கருகில் சிலவருடங்களுக்கு முன்னர் மூழ்கியதென்பது குறிப்பிடத்தக்கது.

## 64 தொழில் நிலையங்கள் பாதிப்படைந்தன!

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற கலவரங்களின் போது அறுபத்திநான்கு கைத்தொழில் நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தொழிற் திணைக்கள ஆணையாளர் நடாத்திய ஆய்விலிருந்து இவ்விபரம் தெரியவந்துள்ளதாக தொழில் அமைச்சர் கப்டன் சி. பி. ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இக்கைத்தொழில் நிலையங்கள் மூலம் 25 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையை இழந்துள்ளதாகவும் தொழில் அமைச்சர் தெரிவித்தார். (கு)


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சிட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலயம்.
குறொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.
05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)
போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை. விசா (VISA)
கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!
CROSS TRAVEL SERVICES (PVT)LTD.
Approved Passenger Sales agent in Sri LanKa M/s
swissair
Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

### மணிவாக்கு

காட்டு மனிதனுக்கு வானசாத்திர இரகசியங்கள் உண்மைகளாகா. கடுநோயுற்றோர்க்கு வயிர உணவுகள் உணவாகா; உணவுப்பொருள்கள் போல உண்மைகள் தகுதிபற்றியுள்ளவையன்றி யாவர்க்கும் ஒரே பெற்றியானவை அன்று.

—சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்

## சைவப்பெரியார் சிவபாத சுந்தரத்தின் குருபூசைதினம் இன்று

# சைவப்பழம்

சைவப் பழம் என்ற பெயர் பெற்ற புலோலி ஸ்ரீ சு. சிவபாதசுந்தரத்தைத் தெரிந்தவர்கள் அவர் திருச்சிறுப்பள்ளியில் இருக்கும் சென். யோசெப் கல்லூரி என்னும் ரோமன் கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றுத் தேறியவர் என்று அறிந்தால் ஆச்சரியப்படாமலிரார். அதிலும் சில ஆண்டுகளுக்கு முன்னே தென்னிந்தியாவுக்கு விஜயம்செய்தபோது அதே கல்லூரியில் வசிக்கும் குருவானவர் ஒருவரின் விருந்தாளியாகத் தங்கியிருந்தாரென்று கேள்விப்பட்டால் இதை வாசிப்பவர் அதிர்ச்சியினுல் கலங்கிப்போகக் கூடாது.

அதெல்லாம் போகட்டும்; யாழ்ப்பாணக் கல்லூரியில் (அமெரிக்கன் மிஷன் பள்ளிக்கூடம்) பிறின்சிப்பலாயிருந்த பிக்னெல் பாதிரியாரோடு ஸ்ரீசிவபாதசுந்தரம் நெருங்கிய நண்பன். ஒரு முறை தாகத்திற்கு ஏதாவது அருந்தவேண்டுமென்று பிக்னெல் பாதிரியார் கேட்டுக்கொண்டபோது, ஸ்ரீசிவபாதசுந்தரம் தாம் தேநீர், காப்பி அருந்துவதில்லை;

> சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களை பற்றி அரவிந்தன் 8-6-41 ஈழகேசரி இதழில் எழுதிய இக்கட்டுரை நாற்பத்திரண்டு வருடங்களுக்குப்பின்னரும் சுவை குன்ருதிருக்கிறது. ஆகவே இதனை இன்று அவருடைய குருபூசைத் தினத்தில் வெளியிடுகிறோம். அரவிந்தன் வேறு எவருமில்லை. பின்பு செனட்டர்பதவி வகித்து அண்மையில் மறைந்த வழக்கறிஞர் திரு. பி. நாகலிங்கம் அவர்களே தான்.

எலுமிச்சம்பழம் கரைத்துச் சீனியும் போட்டுக் கொடுத்தால் தாகவிடாய்க்கு நேர்த்தியாக இருக்குமென்று சொல்லி வாங்கிச் சாப்பிட்டுப்பார்த்தாராம். வைதிகர்கள் வேண்டுமானுல் 'சிவசிவா' என்று சொல்லிக் காதிற் போட்டுக் கொள்ளட்டும்.

மகாத்மா காந்தியடிகள் நான்கு முழம் இடுப்பிற் கட்டிக்கொண்டால் மானத்தைக் காப்பாற்றப் போதுமானது 1921ம் ஆண்டு கூறுவதற்கு முன்பு ஸ்ரீ சிவபாதசுந்தரம் அதைவிட அங்கவஸ்திரம் ஒன்றே போதுமென்று அறிந்துகொண்டார்.

கொழும்பிலிருந்து விசேஷ கூட்டமொன்றுக்கு வரும்படியாக அரசாங்கத்தார் அழைத்திருந்தார்கள். அதற்காகப் பிரயாணத்துக்கு முதலாம் வகுப்பு இலவசச் சீட்டுப்பெறும் பத்திரமொன்று அனுப்பியிருந்தனர். யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற் பிரயாணச் சீட்டுக் கொடுப்பவரிடம் போய் ஸ்ரீசிவபாதசுந்தரம் தமது பத்திரத்தை நீட்டினுர். 'வாறன்ட் இப்படியிருக்கட்டும்; பிறின்சிபல் எங்கே?'' என்று கேட்டார் கிளாக்கர். இரு முறை, மூன்று முறை கேட்ட பின்னர், ''நான்தான் பிறின்சிபல்'' என்றதும் கிளாக்கர் பிரயாணச்சீட்டைக் கொடுத்துவிட்டு மறுபக்கம் திரும்பிவிட்டாராம்.

எளிய உடை, எளிய உணவு, எளிமையாகக் கட்டிய வீடு இவையெல்லாம் ஸ்ரீ சிவபாதசுந்தரத்திற்கு இயற்கையாகப் பொருந்தியவை. கல்லூரிக்கு வரும் நேரங்களில் மாத்திரம் ஒரு கோட் போட்டுக்கொள்வார்.

இப்பொழுதும் வீட்டில் போய்ப் பார்த்தால் இவருடைய அல்பக்கா கறுப்புக் கோட்டும் ஒரு சைனு சில்க் கோட்டும் தொங்குவதைக் காணலாம். இவைகளுக்கு முறையே வயது பதினைந்தும் இருபதும் என்று நமது ஆசிரியர் அவர்களே சொல்லுவார்.

சைவத்திலும், நாயன்மார் நால்வரிலும் உள்ள பற்றும், அபிமானமும் அளவிட்டுக் கூற முடியாது. ''ஆலய வழிபாடு ஆன்ம ஈடேற்றத்திற்கு அத்தியாவசியமா?'' என்று ஒருமுறை வகுப்பிலே ஒரு மாணவர் கேட்டார். ''மாணிக்கவாசகர் ஆலயவழிபாடு தவருது செய்து வந்தார். நீர் அவரிலும் கூடிய ஆன்ம வளர்ச்சி உடையவரானுல் ஆலய வழிபாட்டைச் செய்யாதுவிடலாம்'' என்று மறுமொழி வந்தது.

### நிறைந்த அறிவு

ஆங்கிலத்திலும் தமிழிலும் தர்க்க சாஸ்திரத்தை நிறைவுறக் கற்றவர். மேல் நாட்டு நூல்களையும் இந்திய நூல்களையும் நுணுக்கமாய்ப் படித்தவர். பிறநாட்டிலிருந்து யாரும் பிரமுகர் இங்கு வந்து ஆங்கிலத்தில் விரிவுரையாற்றுவதுண்டு. அதன் முடிவில் தமிழில் சுருக்கமாகச் சொல்லும்படி ஸ்ரீசிவபாதசுந்தரம் அவர்களைக் கேட்டால், அந்த விரிவுரையில் அவசியமற்றவைகளைத் தட்டிவிட்டு முக்கியமான மூன்று நான்கு கருத்துக்களைத் தெரிவித்து அரைவாசி, கால்வாசி நேரத்தில் விளக்கிச் சொல்லிவிடுவார். தர்க்கசாஸ்திரத்தில் பலருக்கு ஏட்டுப் படிப்பு. ஆனுல் ஸ்ரீ சிவபாதசுந்தரத்தின் பேச்சு, எழுத்து எல்லாவற்றிலும் அவரது ஆழ்ந்த ஞானம் தோன்றும். கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் படித்துவிட்டுத் தர்க்க குதர்க்கத்தோடு வரும் சைவ இளைஞர்களுக்கு அவருடைய சைவப் போதம் இரண்டாம் புத்தகம் தகுந்த ஔடதமாகும்.

### நகைச்சுவை

வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கும் போதெல்லாம் நகைச்சுவை ததும்பிக் கொண்டிருக்கும். பிள்ளைகள் தத்தம் பக்கத்திலிருக்கும் சகபாடியுடன் உபாத்தியாயருடைய பார்வைக்கு அகப்படாமற் சம்பாஷிப்பது வழக்கம் ஒரு முறை தம்வகுப்பில் தம் மாணுக்கரை வியாசமெழுதச்சொல்லி விட்டுப் பார்த்துக்கொண்டிருந்தார் ஸ்ரீ சிவபாதசுந்தரம் ஒருவன் தன் பக்கத்திலிருந்த பையனுடன் ஏதோ பேசினுன் ''என்ன பேச்சு என்று கேட்ட போது அந்த மாணவன் இன்றைக்கு என்ன திகதி என்று கேட்டேன் என்றுன். அப்படியானுல் அவன் தகப்பனுர் ஏதும் பஞ்சாங்கம் போடுகிறவரோ?'' என்று வந்தது அடுத்த கேள்வி.

ஒரு சிலகாலம் 1929-ம் ஆண்டு முதல் 1931 வரையில் அரசியல்துறையிலும் ஒரு நுழைவு நுழைந்தார் அரசியல் துறை கணித சாஸ்திரம் மாதிரியல்ல தர்க்கசாஸ்திரம் மாதிரியுமல்ல இதில் ஸ்ரீ சிவபாதசுந்தரம் வெகுதூரம் போக முடியவில்லை ஆனுல் இவர் யாழ்ப்பாண வாலிப மகாநாட்டுத் தலைவராயிருந்த காலத்தில்தான் பள்ளிக்கூடங்களில் ஹரிஜனப் பிள்ளைகளுக்கு சமாசனம் கொடுக்கவேண்டுமென்ற பிரச்னை கிளம்பியது இதை எதிர்த்தவர்களுக்கெல்லாம் தகுந்த முறையில் 'டோஸ்' கொடுத்தார். பனையில் பள்ளனிருக்க நீர் கீழேயிருந்தால் பள்ளனுக்கு உயர்ந்த ஆசனமாயிருக்குமல்லவா? அதை ஏன் நீர் அரசாட்சியாருக்கு மனுப்பண்ணக்கூடாது? வயலில் வேலை செய்யும்போது பள்ளரைத்தாழ்ந்த இடங்களில் நிற்கவிட்டு உயர்ந்த மேட்டில் நின்றுதான் நீர் வேலை செய்யவேண்டும்'' என்றெல்லாம் பத்திமுத்தியாய்த் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் பிரசாரங்கள் மூலமும் சரமாரியாய்ப் பொழிந்தார்.

சைவக்கல்விக்கும் சைவசித்தாந்தத்துக்கும் செய்த அருந்தொண்டை எவரும் மறக்க முடியாது கொள்கைப்பேதமுடையவர்களும் இவரை யாழ்ப்பாணத்தில் தோன்றிய பெரியார்களில் ஒருவராகவே மதித்துவருகிறுர்கள்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்12-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

## நல்லூர் உற்சவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துச் செய்யப்பட்டுள்ளது. எவ்வாருயினும் மாநகரசபை மட்டுப்படுத்தப்பட்ட மின்சார, சுகாதார, நீர் விநியோக சேவைகளை நடாத்தும். இந்நிலையில் வணக்கத்துக்காக வருபவர்களும், வர்த்தகர்களும் உற்சவம் சீராக நடந்தேறிமுடிய ஆலய நிர்வாகத்தினருக்கும், மாநகர நிர்வாகத்தினருக்கும் இரட்டிப்பு ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்கவேண்டுமெனப் பெரிதும் வேண்டப்படுகின்றது.

**பின்வருவன தடைசெய்யப்பட்டுள்ளன**

''தண்ணீர்ப்பந்தல்கள், தாக சாந்திநிலையங்கள் அமைப்பது; தடைமுகாமுக்குட்பட்ட பகுதிகளில் அங்கீகாரமற்ற கொட்டில்கள் அமைப்பது; புதிய வியாபாரநிலையங்களை நிறுவுவது.

''ஆலயவீதிகளிலும்அவற்றை அண்மித்த பகுதிகளிலும் வாகனங்கள் நிறுத்தப்படலாகாது. இந்த ஒழுங்கினை மேற்கொள்வதில் அர்ச் யோவான் ஆளணிப் படையினர் மாநகர சபைக்கு உதவுவர். கோவிலின் உள்வீதியில் பக்தர் கூட்டம் கூடுதலாக இருப்பின் அசௌகரியமாகவும், சுகாதாரத்திற்கு ஒவ்வாததாகவும் இருக்குமாதலால்வழிபாட்டை முடித்துக்கொண்டவர்கள் ஏனையோருக்கு வழிவிட்டு உடன் வெளிச்செல்வது விரும்பத்தக்கது. கோவில் சுற்ருடலில் கூட்டமாக நிற்காது வேளைக்கு வீடு திரும்புவதை ஒவ்வொருவரும் உறுதிப்படுத்துதல்வேண்டும்.

''ஆபரணங்கள் அணிந்து ஆலயம் வருவது தவிர்க்கப்படுதல் விரும்பத்தக்கது.

யாழ். நகர்- பருத்தித்துறை வாகனங்கள் அனைத்தும் தமது போக்குவரத்திற்கு உற்சவகால ஆரம்ப நாளிலிருந்து நாவலர் வீதி-கச்சேரி நல்லூர்வீதியைப் பயன்படுத்தும். ஏனைய வாகன உரிமையாளர்களும் கூடுமான வரை ஆலயச்சுற்ருடலால்வாகனம் செலுத்துவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

''இவ்வறிவித்தல் ஆலய அறங்காவலரின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது. இப்படியான ஒரு சூழ்நிலையில் எம்மை நாமே ஒழுங்குபடுத்தக் கூடியவர்கள் என்பதை நிரூபிக்கக் கூடியதாக, தமிழ் மக்கள் பொதுவாகவும், சைவப் பெருங்குடிமக்களும், இளம் சந்ததியினர்களும் குறிப்பாகவும் நடந்துகொள்ள வேண்டுமென மிகவும் பணிவாக வேண்டப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஒழுங்குகளில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மாற்றம் செய்யப்படின் அவ்வப்போது அவை அறிவிக்கப்படும்''.

## கலவரங்களில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக 1,150 பேர்வரை கைதாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பலர்மீது பாரதூரமான குற்றச் செயல்கள் தொடர்பாக வழக்குத் தாக்கல்செய்யப்படவுள்ளது.

இதேவேளை அவசரகாலச் சட்ட விதிகளின்கீழ் எந்த ஒரு நீதிபதிக்கும்பிணைவழங்கும் அதிகாரம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரே இந்த அதிகாரத்தைக் கொண்டிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது, (கி)

## நிவாரணப்பணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள்வரை உரையாடினுர். இந்த உரையாடல் சிநேகபூர்வமானதாக இருந்ததென்று அவர் கூறினுர்.

திரு. ஜயவர்த்தன தமது இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று தாயகம் புறப்படவிருந்தார். ஆனுல் அவர் மேலும் ஒரு நாள்வரை தமது பயணத்தை நீடித்துள்ளார். பிரதமர் இந்திராவை மீண்டும் ஒரு தடவை அவர் சந்திப்பார்.

வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ் திரு. ஜயவர்த்தனவைக் கௌரவித்துவிருந்துபசாரமொன்றை வழங்கினுர். (கி)

## காய் கறிகள் விலை இறக்கம்

[சுண்டிக்குளி]

தென்பகுதி லொறிகள் சில வடபகுதிக்கு வந்ததினுல் கோவா, கரட் போன்ற தென்பகுதி மரக்கறிகள் விலைகுறைந்துள்ளன. கிளிநொச்சி சந்தையில் ஏராளமான வாழைக்குலைகளையும், வெங்காயத்தையும் தென்பகுதி வர்த்தகர்கள்வாங்கிச் சென்றனர்.

## அகதிகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தும்படி உத்தரவு வந்துள்ளதாகவும், இதன்படி அகதிகளை இங்கு அமர்த்துவதா, அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குப் பயன்படுத்துவதா என்பது குறித்து முடிவு செய்யப்படுமென்றும் யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை புனித கதிரைமாதா ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 6-ம் திகதி சனிக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 14-ம் திகதியன்று சற்பிரசாத சுற்றுப்பிரகாரமும், மறுநாள் 15-ம் திகதியன்று திருப்பலி பூசையும், திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது.

பூசைகளை சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. ஏச். ஜெபநேசன் அடிகளார் நிறைவேற்றுவார். 15-ம் திகதியன்று வழமைபோல அன்னதானமும் நடைபெறுமென்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி தெரிவித்தார்.

## ஆடுகள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

மாதகல் பகுதியில் கடந்த சில தினங்களாக ஆடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் இப்பகுதி மக்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர். சில வீடுகளில் பட்டப்பகல் வேளைகளிலும் ஆடுகள் காணுமல் போய்விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## மருத்துவபீட

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நடராஜா, ஆர். நகுலநாதன், ஆர். எ. நரேந்திரகுமார், எஸ். எஸ். ரிஷங்கன், எ. எல். பைலர் ரஹ்மான், செல்விகள் ரி. சாந்தினி, பி. சீனித்தம்பி, எஸ். கமலேஸ்வரி, ரி, தேவமஞேஹரி, பி. பெருமைனர் எஸ். நாகலிங்கம்' எம். கந்தப்பிள்ளை'

**நூனசித்தி:**

ஏ. அப்துல் சாலிக், எச். அஸீஸ், வி. ஜே. ஹேமன் ராஜ், எம். ஐ. இஸ்மாயில், வி. ஜெயபாலரட்ணம், பி. கனகசபை, பி. எம், மஞேகர், எம். ஏ. ஸி. மொஹமட் அமீன், எம். ஜே. மொஹமட் இக்பால், ரி. நந்தகுமாா, பி. நந்தகுமார், கே. பொன்னுசாமி, ஈ. வை. புஷ்பராஜா, ரி. ராஜஜோன், ரி. ரமணன். வி. ரவிக்குமார், டி. ஏ. சேஷகுமாரன், ஆர். சிவசங்கர், ரி. வாகீஸ்வரன், பி. பரம்சோதி, வி. ஸ்ரீபஞ்சலிங்கம், எஸ். உதயகுமாரன், எஸ். ஞானபாஸ்கரன், செல்விகள்: ஏ. கீதா, கே. ஜானகி, ஐ. கதிரவேலு, பி. நடராஜா, எஸ். ரஜினி.

**மீள்நூனசித்தி:**

யு. எல். அலாவுதீன். எம். எம். பஷீர், ஆர். துஷ்யந்தகுமார், எம். செல்வராஜன், என். சிவகுமார்.

(மிகுதி நாளை)

# மரண அறிவித்தல்

**மாணிக்கம் நடராசா**

(Chartered Valuer-சாட்டேட் மதிப்பீட்டாளர்)

மாணிக்கம் நடராஜா ஜூலை 31-ம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் சிவபதமடைந்தார். இவர் சிவமணியின் அன்புக் கணவரும், காலம்சென்ற டாக்டர் செ. மூ. வன்னியசேகரம், திருமதி ஈஸ்வரி வன்னியசேகரம் அவர்களின் மருமகனும், திருமதி பாக்கியவதி கனகசபை, திருமதி வேதநாயகி தில்லைநாயகத்தின் அன்புச் சகோதரனும், பேராசிரியர் கருணைநாதன், தவமணி ஞானசுந்தரம், ஐராணி ஆனந்தகுமார், டாக்டர் ஐங்கரன், சிவநாதன் ஆகியோரின் மைத்துனரும், கஜேந்திரன், மாணிக்கேந்திரன், இந்திரா சோமசுந்தரம், சிரீதரன், செங்காதரன், செங்காதேவி புவீந்திரன், ஜெயா, பிரபா, சுந்தரி, பத்மா, ரோகிணி, வன்னியகுமார், சியாமளா, அனுஷலா, அபிராமி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கனத்தை மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

''சிவஸ்தான்'', K. K. S. வீதி, மல்லாகம்.
22, ரோகினி வீதி, கொழும்பு-6.

8163